## தலைப்பு 228 - நீதிமன்ற நிர்வாகம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீதிமன்ற நிர்வாகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதிமன்ற நிர்வாகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் நீதிமன்ற நிர்வாகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்ற நிர்வாகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன எனவும்,

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (i) கடந்த வருடத்தின் நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றின் இறுதி மீதி மீளாய்வாண்டில ஆரம்ப மீதியாக எடுக்கப்பட்ட போது 07 சொத்துக்களுக்கான மீதிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 371,301,551 ஆல் இணங்கியிருக்கவில்லை. | இவ்வேறுபாட்டிற்கு காரணமாக இருந்தமை மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதி ஆரம்ப மீதியாக உள்ளடக்கப்பட்டமை, தலைமை அலுவலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த சொத்துக்கள் தலைமை அலுவலகத்தின் சிகாஸ் வேலைத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு குறிப்பிட்ட உயர்நீதிமன்றத்தின் ஆரம்ப மீதியாக சிகாஸ் வேலைத் | கடந்த வருடத்தின் சொத்துக்களின் இறுதி மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தமை. | |
| (ii) | நீதிமன்ற வலயத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான அட்டவணைப் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் பொறி மற்றும் உபகரணங்களின் மொத்த மீதி ரூபா 457,321,708 ஆல் மற்றும் மீளாய்வாண்டில் அவற்றின் கொள்வனவுகள் ரூபா 23,567,420 ஆல், நிதிக்கூற்றுக்களின் மீதியுடன் இணங்கியிருக்கவில்லை. | அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் BOS அறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. CIGAS வேலைத்திட்டத்தின் பிரகாரம் உயர்நீதிமன்ற அறிக்கை மற்றும் BOS அறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு என்பவற்றுக்கிடையே வேறுபாடொன்று காணப்படவில்லை. | BOS அறிக்கை மற்றும் நீதிமன்ற வலயங்களில் நிலையான சொத்துக்கள் பதிவேடு இணக்கப்பட்டு மீதிகள் திருத்தம் செய்யப்படல் வேண்டும். |

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக்கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| தனிப்பட்ட மீதி வகைப்படுத்தப்பட்ட பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கு இடையே காணப்பட்ட ரூபா 12,225,070 ஆன வேறுபாட்டிற்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வேறுபாடு பல வருடங்களாக காணப்பட்டு வருவதுடன் நீதிமன்றத்தினால் சரியான கடன் மீதிகள் புத்தகங்களில் பதியப்படாமை மற்றும் உத்தியோகத்தர்களின் இடமாற்றலின் கீழ் கடன் மீதிகள் தீர்க்கப்படுகின்ற போது இவ்வழு ஏற்பட்டுள்ளது. | தனிப்பட்ட மீதி வகைப்படுத்தப்பட்ட பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் சமப்படுதல் வேண்டும். |

### (இ) வணிகமல்லாத முற்பணக்கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| ஆனமடுவ மற்றும் சிலாபம் நீதிவவான் நீதிமன்ற உத்தியோகபூர்வ விடுதிகள் நிர்மாணிப்பதற்கான 02 செயற்திட்டங்களுக்காக 2021.12.31 இல் மேலும் அறவிடப்பட வேண்டிய வாடகை மற்றும் வேலை முற்பண மீதியான ரூபா 6,264,535 ஆன பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமையால் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் அம்முற்பணக் கணக்கு மீதி மற்றும் வாடகை மற்றும் வேலை முற்பணத் திரட்டு மீதி ரூபா 6,264,535 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மேற்படி செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த வேலை தொங்குவதற்கான முற்பணத் திரட்டு கணக்கு ஆரம்பிக்கப்படாமையால் இம்முற்பணம் அறவிடப்படல் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. எனினும் வழங்கப்பட்டிருந்த முற்பணத் தொகை பற்றுச்சீட்டுக்கள் செலுத்தப்படும் போது குறிப்பிட்டவாறு அறவிடப்பட்டு வருவதுடன் 2021.12.31 இல் அறவிட வேண்டிய முற்பணத் தொகை ACA-5 (a) இல் குறிப்பொன்றாக உள்ளடக்கப்பட்டுள்ளது. | 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 250/2016(i) ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் முற்பணம் தொடர்பான சரியான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்படாமையால் 8 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 255,400,000 தேறிய ஒதுக்கத்தில் சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் தொற்றுநோய் காரணமாக நிறுவனத்தின் நடவடிக்கைகள் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்படாமை மற்றும் ஒப்பந்த நிறுவனத்தினால் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால் எதிர்பார்த்தவாறு இறுதிப் பற்றுச்சீட்டுக்கள் கொடுப்பனவு செய்யப்படாமை | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

காரணமாக ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன.

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்பு மீதிகள் மற்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நீதிமன்ற வலயங்களின் பொறுப்புக்கள் தொடர்பான அட்டவணையின் மீதிகள் (கோவைகள்) என்பவற்றுக்கிடையே ரூபா 9,932,916 ஆன இணக்கமின்மையொன்று காணப்பட்டது. | உயர்நீதிமன்ற வலயங்களினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த அட்டவணைகளில் காணப்பட்ட தவறுகள் திருத்தப்பட்டு குறிப்பு இலக்கம் IV இற்கு பெறுமதி உட்படுத்தப்பட்டுள்ளது. | நீதிமன்ற வலயங்களில் காணப்படும் கணக்கு மீதிகளுடன் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு மீதிகள் சரியாக இருத்தல் வேண்டும். |
| (ஆ) கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று (குறிப்பு iii) இல் உள்ளடக்கப்பட வேண்டிய மொத்தம் ரூபா 6,953,210 ஆன பொறுப்புக்கள், பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (குறிப்பு iv) காட்டப்பட்டிருந்தது. | பொறுப்புக்கள் தொடர்பான கூற்று (குறிப்பு iii) இற்கு உள்ளடக்கப்பட்டிருந்தமை சிகாஸ் வேலைத் திட்டத்தின் மூலம் வருட இறுதித் திகதியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட தொகைகள் மட்டுமே அதாவது ஒதுக்கீடு காணப்பட்ட போதிலும் கட்டுநிதி இல்லாமையால் கொடுப்பனவு செய்ய முடியாதிருந்த பற்றுச்சீட்டுக்களாகும். நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு இச்செலவுகளை செய்வது அவசியம் என்பதால் குறிப்பு இலக்கம் iv இல் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்களுக்கு உடன்பட வேண்டியிருந்தது. | கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் குறிப்பு iii மற்றும் குறிப்பு iv இல் சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) பொறுப்புக்கள் தொடர்பான கூற்று-(i) குறிப்பு (iv) இல் காட்டப்பட்டிருந்த போதிலும் ரூபா 26,557,266 ஆன | நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று (குறிப்பு iii) இற்கு உள்ளடக்கப்பட்டிருந்தமை | வருட இறுதியில் நிறுவனத்தின் அனைத்து கடப்பாடுகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொறுப்புக்கள், திறைசேரியின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கையில் (SA92) உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | சிகால் வேலைத் திட்டத்தின் மூலம் வருட இறுதித் திகதியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட தொகைகள் மட்டுமே அதாவது ஒதுக்கீடு காணப்பட்ட போதிலும் கட்டுநிதி இல்லாமையால் கொடுப்பனவு செய்ய முடியாதிருந்த பற்றுச்சீட்டுக்களாகும். நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு இச்செலவுகளை செய்வது அவசியம் என்பதால் குறிப்பு இலக்கம் iv இல் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்களுக்கு உடன்பட வேண்டியிருந்தது. | மற்றும் பொறுப்புக்கள் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கியிருக்காமை**

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் | | | | |
| (i) | XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5 ஆம் பிரிவு | 6,707,975 | ஓய்வூதியம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் மாற்றியமைக்கப்பட்ட ஓய்வூதியம் அல்லது பணிக்கொடைத் தொகையிலிருந்து குறைக்கப்பட்டிருக்க வில்லை. | ஒழுக்காற்று விசாரணைகள் நடந்து கொண்டிருந்தமையால் ஓய்வூதியக் கோவைகள் அனுப்பி வைக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டமையால் பெரும்பாலான கடன் மீதிகள் அறவிடப்படுவதற்கு முடியாதிருந்தமை, ஓய்வூதியப் பணிக்கொடை கொடுப்பனவிற்காக | அறவிடப்படாத கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஒதுக்கங்கள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு விடுவிக்கப்படாமை. | |
| (ii) | 7.2.5 ஆம் பிரிவு | 110,800 | முன்னர் பெறப்பட்ட துவிச்சக்கரவண்டி கடன் முழுமையாக அறவிடப்படாது கொழும்பு உயர் நீதிமன்ற வலயத்தின் உத்தியோகத்தர் ஒருவருக்கு மோட்டார் வாகனக் கடன் ஒன்று வழங்கப்பட்டு பின்னர் அவர் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டமையால் பெறப்பட்ட மோட்டார் வாகனக் கடன் ரூபா 107,000 மற்றும் துவிச்சக்கர வண்டிக்கடன் ரூபா 3,800 என்பன 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டன. | இது தொடர்பாக கொழும்பு உயர்நீதிமன்றத்திடம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் உத்தியோகத்தர் தொடர்பாக எவ்வித தகவலையும் கண்டுபிடிக்க முடியாதிருப்பதால் தொடர்ந்தும் தேடிப்பார்த்து மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக 2021.10.13 ஆந் திகதிய கொ/மகாடி/ஹி/அத்திபீ/2021 ஆம் இலக்க கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | முற்பணங்கள் வழங்கப்படும் போது மற்றும் அறவிடப்படும் போது தாபனக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>---------------------------- | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(1) | - | 2001.05.13 ஆந் திகதி இரத்தினபுரி நீதிவான் நீதிமன்றத்தில் மரத் தளபாடங்கள் மற்றும் சாதனங்கள் தீப்பற்றியமையால் ஏற்பட்ட இழப்புக்கள் 2021 திசெம்பர் 31 வரையில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 109(1) மற்றும் (2) | 2,567,467 | 2000 தொடக்கம் 2020 வரையில் 38 சந்தர்ப்பங்களில் ஏற்பட்டுள்ள நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பாக 2021 திசெம்பர் 31 வரையில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது ஏற்படுகின்ற வாகன விபத்துக்கள் உட்பட ஏனைய நட்ட இழப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் பல வருடங்கள் பழமை வாய்ந்த இழப்புக்குள்ளான படியால் அது சம்பந்தமாக விசாரணை நடத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்களை தீர்த்துக் கொண்டு அதன்படி தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 396(இ) | 1,966,222 | மீளாய்வாண்டின் இறுதியில் தலைமை அலுவலகம் மற்றும் 23 உயர்நீதிமன்ற வலயங்களுக்கு சொந்தமான 69 வங்கிக் கணக்குகளுக்கான வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாமல் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு உரிய நீதிமன்றங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 26 நீதிமன்ற வலயங்களின் 582 வைப்புக் கணக்குகளில் ரூபா 13,035,216,242 ஆன வைப்பு மீதிகள் தொடர்பாக காலப்பகுப்பாய்வொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நீதிமன்ற வலயங்களுக்கான பெரியளவு வைப்புத் தொகையொன்று காணப்படுவதால் காலப்பகுதிப்பாய்வொன்றை சமர்ப்பித்தல் நடைமுறையில் | வைப்புக் கணக்குகளுக்காக காலப்பகுப் பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டு நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | சாத்தியமில்லை என்பதுடன் தலைமை அலுவலகத்திற்காக மட்டும் காலப்பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தங்களுக்கான கொடுப்பனவு செய்யப்பட்ட போது பிடிகாசாகப் பெறப்பட்டிருந்த மொத்தம் ரூபா 172,321,534 ஆனது 2022 மார்ச் வரையில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பல நிர்மாணங்கள் இதுவரையில் முடிக்கப்பட வில்லையென்பதால் நிர்மாண நடவடிக்கைகள் முடிவுறும் வரை பிடிகாசு விடுவிக்கப்பட்ட முடியாது என்பதுடன் நிர்மாண நடவடிக்கைகள் முடிவுற்றாலும் நிலையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரம் பெறப்படும் வரை இறுதிப் பற்றுச்சீட்டுக்கள் செலுத்தப்பட முடியாமை மற்றும் ஒப்பந்தக்காரர்களினால் இறுதிப் பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமை யினாலும் இந்த பிடிகாசு வைப்புக் கணக்கில் மீதியாகக் காணப்படுகின்றது. எனினும் விடுவிக்கப்பட முடியுமாகக் காணப்படுகின்ற அனைத்து தொகைகளையும் விடுவிப்பதற்கு அவ்வாறு இல்லாவிட்டால் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்காகத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | முடிவடைந்த நிர்மாணங் களுக்கான பிடிகாசுத் தொகை ஒப்பந்தத்தின் பிரகாரம் தீர்க்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| வாகன விபத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் 26 வாகனங்களுக்கான மொத்தம் ரூபா 250,360 ஆன நட்டங்கள் பதிவளிக்கப்பட்டிருந்தும், நட்டங்கள் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்றில் (குறிப்பு 1) 48 வாகனங்களுக்கான மொத்தம் ரூபா 579,740 ஆன நட்டமொன்று பதிவளிக்கப்பட்டிருந்தது. | தற்போது வாகன விபத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு நட்டங்கள் பதிவளிக்கப்பட்டிருந்ததுடன் வாகன விபத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்படாத பல வருடங்கள் பழைமை வாய்ந்த வாகன விபத்துக்களுக்கான நட்டங்களைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாகன விபத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டு பேணப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) கல்முனை புதிய சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்திற்காக 2017 திசெம்பர் 29 ஆந் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அத்தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், 07 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2018 சனவரி 19 ஆந் திகதி பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அத்துடன் 2019 யூலை 19 ஆந் திகதி பணிகள் முடிவடைய வேண்டிய | செயற்திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட காணியில் மரங்கள் வெட்டப்பட்டு நீக்கப்படுவதற்காக எதிர்பார்த்த காலத்தை விட பல நாட்கள் எடுத்தமையால் 2018.01.19 ஆந் திகதி நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதுவரை ஒப்பந்த நிறுவனத்தினால் இறுதிச் பற்றுச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை. ஒப்பந்தக்காரருக்கு செயற்திட்டங்களை வழங்கும் போது பெறுமதியின் அடிப்படை | தாமதமின்றி செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் மாற்றப்படுகின்ற திட்டங்களுக்காக அமைச்சின் எழுத்து மூலமான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். அத்துடன் சரியான ஒப்பந்தப் பெறுமதியின் அடிப்படையில் செயலாற்றுகை பிணை பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இச்செயற் திட்டத்தின் பணிகள் 2019 யூலை 15 முடிக்கப்பட்டதாக மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தினால் 2019.09.22 ஆந் திகதி குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இச்செயற்திட்டத்தின் இறுதிப் பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்வுத் திகதியான 2021 ஒக்டோபர் 21 வரையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2006 இல் 5.4.8(அ) பிரிவிற்கு முரணாக ஒப்பந்தப் பெறுமதியின் அடிப்படையில் எடுக்கப்படாது ரூபா 584,482 ஆல் குறைத்து ஒப்பந்தத்திற்கான செயலாற்றுகைப் பிணை பெறப்பட்டிருந்தது. மேலும் அமைச்சின் எழுத்துமூல அங்கீகாரமின்றி குறிப்பிட்ட நீதிபதியின் தேவையின் அடிப்படையில் நிர்மாணத் திட்டம் மாற்றப்பட்டிருந்தது. | செயலாற்றுகை பிணையை பெறுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நிர்மாணத் திட்டங்கள் மாற்றப்பட்டமை தொடர்பாக நீதிமன்ற நீதிபதிகளுக்கு தெரியப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத்துவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஆ) | காலி நீதிமன்றத் தொகுதி நிர்மாணம் | | |
| (i) | ஒப்பந்தத்தின் முதலாம் கட்டம் ஏற்றுக் கொள்ளும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு 20 நாட்கள் மற்றும் இரண்டாம் கட்டம் 87 நாட்கள் தாமதத்தின் பின்னர் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | ஒப்பந்தத்தின் முதலாம் கட்டம் நிர்மாணத்திற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகத் தேவையான ஆவணங்கள் பூரணப்படுத்தப்படாததால் ஒப்பந்தம் வழங்கப்பட்ட கடிதத்தின் படி நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்க முடியாதிருந்ததாகவும் மதியுரை நிறுவனத்தினால் CB/AGM/SP/C824 ஆம் இலக்க மற்றும் 2013.12.18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது இரண்டாம் கட்டத்தின் திட்டத்தில் புதிய | ஏற்றுக் கொள்ளப்படும் கடிதத்தின் திகதி திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் அந்த அளவில் அளவிடைப் பத்திரம் திருத்தப்பட்டமையால் பணிகள் ஆரம்பிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டது. | |
| (ii) | செயற்திட்டத்திற்காக அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2(அ) பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய பெறுகை காலக்கெடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அனைத்து பெறுகை நடவடிக்கைகளுக்கும் பெறுகைக் காலக்கெடு தயாரிக்கப்பட்டுப் பெறுகைக்குழுவின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2(அ) பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | ஒப்பந்தம் முறையாகத் திட்டமிடப்படாததால் 2016 ஆகஸ்ட் வரையில் முதலாம் கட்டம் நிறுத்தப்பட்டிருந்ததுடன், முடிப்பதற்கு மிகுதியாகவுள்ள ரூபா 319,083,108 ஆன வேலைப்பகுதி இரண்டாம் கட்டமாக அந்நிறுவனத்திற்கே அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 923,000,000 இற்கு 2020 யூன் மாதத்தில் வழங்கப்பட்டிருந்தமையால் ரூபா 603,916,891 ஆல் ஒப்பந்தக் கிரயம் அதிகரித்திருந்தது. | தவிர்க்க முடியாத காரணங்களால் நிர்மாணக் காலம் நீடிக்கப்பட்டதால் மேலதிக கிரயமொன்று ஏற்பட்டிருந்தது. | முறையான திட்டமிடலுடன் அங்கீகரிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் நிர்மாணம் முடிக்கப்பட வேண்டியதுடன் அரசின் நிதி செலவிடப்படும் போது பொருளாதார ரீதியாகவும் மற்று சிக்கனத்தைக் கருத்திற் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 2016 ஆகஸ்ட் தொடக்கம் 04 வருடங்கள் காலமாக பணிகள் நிறுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்காக அக்காலப்பகுதிக்கு பாதுகாப்பு, மின்சாரம், தொழிலாளர் மற்றும் பதவியணி கட்டணங்களாக ரூபா 23,000,000 | நிர்மாண நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டிருந்தமையால் அது தொடர்பாக திட்டவட்டமான முடிவொன்றுக்கு வரும் வரை அவற்றின் பாதுகாப்பிற்காக இச்செலவுகள் | அரச நிதியை பயன்படுத்தும் போது சரியான திட்டங்களின் பிரகாரம் செயற்திறனாகவும் மற்றும் பொருளாதார ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட வேண்டியேற்பட்டது. | வேண்டும். |
| (v) | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.10.1(ஆ) பிரகாரம் குறைந்த விலைமனுவை சமர்ப்பித்துள்ள மனுதாரருக்கு மனுவை வழங்குவதற்கு முன்னர் முன் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு ஒப்பந்தம் செயற்திறனாகச் செயற்படுத்துவதற்குமான திறமை தொடர்பாக பரீட்சிக்கப்படாததால் 2014 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்கள் திட்டமிடப்பட்ட மனிதவளம் ஒப்பந்தத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் நிர்மாணம் தொடர்பான முன்னணி அரச நிறுவனமாக இருப்பதால் ஒப்பந்தத்தை செயற்திறனாகச் செயற்படுத்துவதற்கு தேவையான திறமை மற்றும் வளங்களின் அளவு தொடர்பாக முன்னர் சிக்கல்கள் எதுவும் இல்லாதிருந்தமையால் அந்நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.10.1(ஆ) பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நாரம்மல சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தின் அலுவலகக் கட்டிடம் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் - | | |
| (i) | 2019 திசெம்பர் 18 இல் அமைச்சு பெறுகைக் குழுவினால் ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் ஒப்பந்தத்திற்கான ஏற்புக் கடிதம் 2020 சனவரி 20 ஆந் திகதி மனுதாரருக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் 2020 யூன் 08 இல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட காணியில் வழக்குகள் குவித்து கிடந்தமை, கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக நாடு முழுவதுமாக மூடப்பட்டமையால் 2020.06.03 ஆந் திகதி செயற்திட்டத்திற்கான காணி கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2020.06.08 ஆந் திகதி வரை முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் (2006) 8.9.1 இன் பிரகாரம் மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மனுவொன்று ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட மனுதாரருக்கு உடனடியாக முறையான ஏற்றுக்கொள்ளல் கடிதமொன்று வழங்கப்பட வேண்டியுள்ளதுடன் அத்துடன் முறையான ஒப்பந்த உடன்படிக்கை யொன்று எழுதப்பட்டு கையொப்பமிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2017 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த இதன் நிர்மாணம் மற்றும் திட்டம் தொடர்பான உறுதியான முடிவொன்று எடுக்கப்படாததால் பெறுகை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு 2019 ஆம் ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டபோது மொத்தக் கிரய மதிப்பீடு ரூபா 2,926,984 ஆல் உயர்வடைந்திருந்தது. | கட்டிடத்தின் திட்டம் மாற்றப்பட்டதால் மதிப்பீட்டில் ஆரம்பப் பணிகள் பகுப்பாய்வு விளக்கங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு, 2018 அலகுக்கான விலை (2018 BSR Rate) பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டமை மொத்தக் கிரயம் உயர்வடைவதற்கான காரணமாக இருந்தது. | சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பெறப்படுகின்ற ஒதுக்கங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் உரிய பணிகளுக்கு பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (iii) | ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட 270 நாட்களுக்குள் செயற்திட்டம் முடிக்கப்பட்டு மீண்டும் கையளிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2020 செப்டெம்பர் 28 பணிகள் ஆரம்பிக்கப்பட்டு செயற்திட்டத்தின் 2021 செப்டெம்பர் 30 இல் பௌதிக முன்னேற்றம் 33 சதவீதமாக இருந்தது. | 2020.09.28 இல் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்து முன்மொழியப்பட்ட காணியில் காணப்பட்ட சிக்கல்கள் (வழக்குகளை நீக்குதல், காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட காணியில் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நிர்மாணப் பொருட்களை வைப்பதற்கான இடமொன்று இல்லாமை, பொருட்கள் முழுமையாக நீக்கப்பட்டு முதலாம் மாடியின் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் செய்யப்பட வேண்டியிருந்தமை) அத்துடன் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வது சிக்கலாக இருந்தது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | அறவிடப்படாத கடன் மீதிகள் | | |
| (i) | அரச உத்தியோகத்தரின் முற்பண பீ கணக்கின் இணக்கக் கூற்றின் பிரகாரம் | இக்கடன் மீதிகள் 20 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதிகளாகும். | நிலுவைக் கடன் மீதி விரைவில் அறவிடப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவைக் கடன் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 29,386,794 என்பதுடன் 2022 யூன் 02 இல் அதில் உள்ளடங்கப்பட்ட 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 3,510,381 ஆகும். | இவற்றுக்கான கடன் கோவை, தனிப்பட்ட ஆவணங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பிணையாளர் போன்ற எவ்வித தகவல்களும் நீதிமன்றத்தில் காணப்படாததால் கடன் அறவிடுவது தொடர்பான மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுப்பது சிரமமாக உள்ளது. | வேண்டும். |
| (ii) | மரணித்த உத்தியோகத்தர் களிடமிருந்து 2022.04.30 இல் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 3,212,313 என்பதுடன் வருடத்தில் எவ்வித தவணையொன்றும் அறவிடப்படாத மொத்தம் ரூபா 2,182,397 ஆன 16 கடன் மீதிகள் காணப்பட்டன. | பல வருடங்களாக அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா 2,182,397 ஆன கடன் மீதிக்கான முறையான தகவல்கள் காணப்படாமையால் மரணப் பணிக்கொடையிலிருந்து அறவிடுவது சிரமமாக உள்ளது. | அறவிடப்படாத கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து மற்றும் சேவையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து 2022.05.30 இல் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் முறையே ரூபா 10,078,450 மற்றும் ரூபா 4,015,309 உம் ஆகும். | பெரும்பாலான கடன் மீதிகள் மிகவும் பழைமை வாய்ந்ததால் கடன் கோவை, தனிப்பட்ட ஆவணங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பிணையாளர் போன்ற எவ்வித தகவல்களும் நீதிமன்றத்தில் காணப்படாததால் மற்றும் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் முடிவடையாத காரணத்தினால் இக்கடன் மீதிகளை அறவிடுவது கடினமாக உள்ளது. | அறவிடப்படாத கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |